**<u>கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3 தாராபுரம்</u>**

**<u>அ.வ.எண்.401/2022</u>**

2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12–ம் நாள் வியாழக்கிழமை **பி.வா.சா.1**

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | வெங்கடாசலம் | தொழில் |
| த/பெ | சுப்பிரமணி | கிராமம் |
| வயது | | தாலுகா |
| | | மாவட்டம் |

**<u>சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு</u>**

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. வாதி லட்சுமிநாதன் என்னுடைய உறவினர் என்று சொன்னால் சரிதான். அவர் என்னுடைய வீட்டில் தான் அதிக நாட்கள் இருந்தார் என்று சொன்னால் சரிதான். அவரை என்னுடைய குடும்பத்தில் ஒரு உறுப்பினராக வைத்து பார்த்துக்கொண்டோம் என்று சொன்னால் சரிதான். லட்சுமிநாதன் என் மீது இருந்த நம்பிக்கையின் காரணமாக பட்டா மாறுதலுக்கு கையெழுத்து போட்டுகொடுத்தார் என்றால் சரியல்ல. ஆனால் கையெழுத்து போட்டு கொடுத்தது உண்மை. நான் வாதியை நம்ப வைத்து கையெழுத்து வாங்கிவிட்டு நம்பிக்கை மோசடி செய்து விட்டேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி வாதியை ஏமாற்றும் நோக்கத்தில் தான் என்னுடைய தம்பி முருகேசன் பெயரில் நான் செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. வாதி, என் மீது வழக்கு தாக்கல் செய்த பிறகு என்னுடைய தம்பி இம்ரான்கான் என்பவருக்கு பொது அதிகாரப் பத்திரம் கொடுத்து மேற்படி சொத்தை விற்பனை செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி இம்ரான் கானுக்கு பொது அதிகார பத்திரம் எழுதிக் கொடுப்பதற்கு முன்பே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பதால் மேற்படி பொது அதிகார பத்திரமோ அதன் பின்னிட்டு

ஏற்பட்ட விற்பனையோ செல்லத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

2. வாதியின் சம்மதத்துடன் மேற்கண்ட ஆவணங்கள் எழுதிக் கொடுக்கப்பட்டதாக நான் தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வாதி என் மீதும் என் குடும்பத்தார் மீதும் வைத்திருந்த அசைக்க முடியாத நம்பிக்கை காரணமாகத்தான் நான் சொன்னவற்றையெல்லாம் அவர் ஏற்றுக்கொண்டார் என்றாலும் நான் அவரை நம்பிக்கை மோசடி செய்து விட்டேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எனக்கும் வாதிக்கும் எந்த விதமான கருத்துவேறுபாடும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வாதி ரியல் எஸ்டேட் தொழில் செய்து நல்ல வருமானம் ஈட்டி வருகிறார் என்றாலும் வாதிக்கு என்னை ஏமாற்றி பணம் பறிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அவரது சொத்தை நான் கிரையம் செய்திருப்பதால் அதற்கான தொகையை கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்து இருக்கிறார் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2026.02.12 18:32:16 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.